**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஜீன் 4-ஆம் நாள் புதன்கிழமை**
**இடைக்கால மனு எண். 2/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 9/2018**

1.ஜெயலெட்சுமி
2.செந்தில்குமார் ---மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முருகானந்தம்
2. சரிதா ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

பூமிராஜாசுப்பு ---எதிர்மனுதாரர்/சோர்க்கப்படவேண்டிய 3ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பு 09.04.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.ஜான், அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.வே.அனுசூரியா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் 3ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு, வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி இம்மனு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

தாவா சொத்துக்களை மனுதாரரின் தகப்பனார் லேட்.ராமகிருஷ்ண பிள்ளை முன்பாத்தியஸ்தர்களிடம் கடந்த 03.03.1989ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்று கிரையகாலம் முதல் டீக்கடை வைத்து அனுபவித்து வந்தார் என்றும், கிரையத்திற்கு முன்னதாக தனது தகப்பனார் வாடகைக்கு டீக்கடை நடத்தி வந்தார் என்றும், தனது தகப்பனார் காலமான பின்பு அவரது வாரிசுகள் அடைந்து நாளது தேதி வரை டீக்கடை நடத்தியும், வாடகைக்கு விட்டும் அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்துக்கள்

சம்பந்தமாக முன்பாத்தியஸ்தர் மல்லிகா அர்ஜீனராஜூ, உஷாதேவி மற்றும் ராமசாமிராஜூ ஆகியோர்கள் தனது தகப்பனார் லேட்.ராமகிருஷ்ணன் மீது பல வழக்குகளை தாக்கல் செய்து அவைகள் இரண்டாம் மேல்முறையீடு வரை நடைபெற்று தனது தகப்பனாருக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில் லேட்.ராமகிருஷ்ணனின் வாரிசுகளை தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான உரிமையும் இல்லாதநிலையில் மோசடியாக கிரைய ஆவணம் எழுதி வாங்கியுள்ள பிரதிவாதிகள் கடந்த 10.01.2018ம் தேதி முதல் தாவா சொத்தில் தாங்கள் அமைதியாக டீக்கடை நடத்தி அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்ய முயற்சி செய்ததால் இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், தாவா சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதியான முருகானந்தம் 2ம் பிரதிவாதியான சரிதாவின் கணவர் பூமிராஜாசுப்பு என்பவருக்கு மோசடியாக கடந்த 06.08.2018ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றும் அவ்வாறு கிரையம் கொடுத்திடவோ, கிரையம் பெறவோ யாருக்கும் சட்டப்படியான உரிமை கிடையாது என்றும், எனவே தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ள 3ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்றும், அவரையும் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்திட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர்களின் மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாய் உள்ளது என்றும், கடந்த 03.03.1989ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முழுவதும் ராமகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டதா என்று ராமகிருஷ்ணன் தாக்கல் செய்த OS.NO.138/1991 என்ற வழக்கில் தாவா கடை எண்.149 ராமகிருஷ்ணன் அனுபவத்தில் இல்லை என்று கூறியதை அடுத்து ராமகிருஷ்ணன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு எண்.160/1996 என்ற வழக்கு 10.09.1997ல் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ராமகிருஷ்ணனை 1/54 அவருக்கு கிரையம் கொடுத்த ராமசாமி ராஜீ பாகத்திற்கு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யலாம் என்று கூறி தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், CRP (MD) No.3325/2023, 1866/2024 மற்றும் 2075/2024 மனுக்களில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் இந்த மனுதாரர்களை தாவா கடை எண்.149, 150 மற்றும் 151ல் சீராய்வு மனு முடியும் வரை சுவாதினத்தில் இருக்கவும், அதே வேளை சீராய்வு மனுதாரரான தன்னை தாவா கடை எண். 148ல் சீராய்வு மனு முடியும் வரை மனுதாரர்கள் / வாதிகள் சுவாதினம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பின்னர் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்படி தற்காலிக ஏற்பாட்டின்படி தாவா சொத்துக்களை அடைந்துகொள்ள வேண்டும் என்றும், பின்னர் இருதரப்பிலும் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ய கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர்கள் தாவா சொத்துக்களில் ராமகிருஷ்ணன் என்பவர் 03.03.1989ல்

கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே கீழமை நீதிமன்றம் நான்கு வழக்குகளில் ராமகிருஷ்ணனுக்கு என்ன உரிமை உள்ளது என்பதை மிக தெளிவுபட 1/54 பாகம் என இறுதி செய்துள்ள நிலையில் மீண்டும் மீண்டும் சமூக நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்தி சட்டவிரோத செயல்களை செய்து வருவதாகவும், மனுதாரார்கள்/வாதிகள் கடந்த 2018ம் வருடம் உயர்நீதிமன்றத்தை அனுகி W.P(MD) No.367/2018 தாக்கல் செய்து அதில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்ற தீர்ப்பை சுட்டிக்காட்டி வழக்கு தாக்கல் செய்ய அனுமதித்த பின்னரும் வாதிகள் உரிய விளம்புகை பரிகாரமோ, பாகபிரிவினை பரிகாரமோ தாக்கல் செய்யாமல் நீதிமன்ற நேரத்தை வீண் அடித்து சொத்தின் உரிமையாளரை 10.09.1997ம் தேதிய தீர்ப்பின் படி தாவா சொத்துக்களை அடையவிடாமல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 4) 3ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:

மனுதாரர்களின் மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்களில் 1/56 பாகம் மட்டுமே முந்தைய வழக்கு தீர்ப்புகள் OS.No.138/1991, OS.No.311/1991, OS.No.107/1997 மற்றும் OS.No.49/1996 வழக்கு தீர்ப்புகளில் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ள விபரத்தை மறைத்து மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் கூறுவதுபோல் தான் மோசடியாக எவ்வித கிரைய ஆவணமும் பெறவில்லை என்றும், முறையான கிரையத்திற்கு சட்டப்படியான உரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாகவும், மனுதாரர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் CRP (MD) No.3325/2023 தாக்கல் செய்து அதில் கடந்த 14.10.2024ல் தாவா கடை எண்.148 பிரதிவாதியின் அனுபவத்திற்கு விட்டுவிட வேண்டும் என்றும், பாகஉரிமை குறித்து உரிய நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டதை மனுதாரர்கள் மறுத்ததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்து அதில் மனுதாரர்கள் ஆஜராகியுள்ளனர் என்றும், மனுதாரர்கள் நீதிமன்ற நேரத்தை வீண் அடித்து பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்து வீண் தொந்தரவு செய்து வருவதாகவும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 5. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-

மனுதாரர் தாவா சொத்துக்களை தங்களது தகப்பனார் ராமகிருஷ்ணபிள்ளை முன்பாத்தியஸ்தர்களிடமிருந்து கடந்த 03.03.1989ம் தேதி கிரையம் பெற்றதாகவும், அதன்பின்பு வாரிசுரிமை அடிப்படையில் தாங்கள் அதில் டீக்கடை நடத்தி அனுபவம் செய்துவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.1) வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது தாவா சொத்தில் தங்களது அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

5.2) இவ்வழக்கில் தாவா சொத்தின் சட்டப்படியான அனுபவம் தங்களது வசம் உள்ளதாக வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் CTC Law Journal 2002(1) CTC page no.523-ல் பிரசுரிக்கப்பட்டுள்ள தீர்ப்பில் மேன்மை தங்கிய உயர்நீதிமன்றம் பாகப்பிரிவினைக்கான பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெறும் வரை மனுதாரரின் தகப்பனாரான லேட்.ராமகிருஷ்ணபிள்ளையின் உடைமை மற்றும் அமைதியான அனுபவத்தினை தடை செய்யக்கூடாது என்று தெளிவாக கூறியுள்ளது என்றும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.3) இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது தாவா சொத்தின் ஒரு பகுதியை 1ம் எதிர்மனுதாரர் முருகானந்தம், 2ம் எதிர்மனுதாரர் சரிதாவின் கணவர் பூமிராஜாசுப்பு என்பவருக்கு கடந்த 06.08.2018ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளதாக ம.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பூமிராஜாசுப்புவை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்தினால் தான் வழக்கில் சரியான முடிவை எட்டுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

5.4) எதிர்மனுதாரர்கள் கூறியுள்ள விசயங்கள் குறித்து வழக்கு இறுதியில் தான் முடிவு செய்ய இயலுமே தவிர, இந்நிலையில் முடிவு செய்தால் அது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. மேலும் **Multiplicity of Proceedings**-யை தடுப்பதும் நோக்கமாகவுள்ளது.

5.5) எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல மேன்மை பொருந்திய உயர்நீதிமன்றம் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தி மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு தாக்கல் செய்திருந்தால் மேன்மை பொருந்திய அந்த தீர்ப்பின் அடிப்படையில் சட்டத்திற்குட்பட்டு வழக்கின் முடிவில் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும். இந்நிலையில் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற பூமிராஜாசுப்புவை இவ்வழக்கில் சேர்த்து வழக்கை நடத்தி தீர்ப்பு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஜீன் 04ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.04 15:16:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.08.2018 | 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரின் கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் -இணையதள நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 09.01.2018 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் WP (MD) No.367/2018ன் உத்தரவு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 14.10.2024 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் CMP (MD) No.17174/2023ன் உத்தரவு நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 15.12.2023 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் CONT.P (MD) No.1645/2022ன் உத்தரவு நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 29.08.2024 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் WP (MD) No.16651/2019 & WMP (MD) No.13282/2019ன் உத்தரவு நகல் |
| எ.ம.சா.ஆ.5 | --- | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.138/1991 என்ற வழக்கின் பிராது சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | --- | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.311/1991 என்ற வழக்கின் பிராது சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.7 | --- | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.50/2001 என்ற வழக்கின் பிராது சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 16.03.2004 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.50/2001 என்ற வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.9 | 16.03.2004 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.50/2001 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 06.06.2003 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.50/2001 என்ற வழக்கின் ராமகிருஷ்ணன் என்பவரின் வாக்குமூலம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 12.08.1991 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.138/1991 என்ற வழக்கின் ஆணையர் அறிக்கை சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.12 | 18.08.1995 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.138/1991 என்ற வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.13 | 10.09.1997 | சிவகங்கை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.160/1996ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.14 | 18.08.1995 | மானாமதுரை டி.மு கோர்டின் OS.No.311/1991 என்ற வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.15 | 10.09.1997 | சிவகங்கை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.133/1996ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.16 | 30.08.2018 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் Crl.OP (MD) No.15451/2018ன் உத்தரவு உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.17 | 06.08.2018 | 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரின் கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் -சான்றிட்ட நகல் |

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.04 15:16:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 2/2024**

**in**

**OS.No. 9/2018**

**Order**

**Dated 04.06.2025**